இரண்டாவது ஓட்டுநர்களுக்கே உரிமம் வழங்கவேண்டுமென்பது பற்றியது. ஈஹக்னி காரேஜ் ஆக்டில் ஓட்டுநர்களே உரிமையாளர்கள் என்ற முறையில் புதிய சட்டம் கொண்டு வர இருக்கிறோம். அந்தச் சட்டம் வந்த பிறகு இந்தப் பிரச்சினை நீங்கிவிடும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பொய்கை ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 452—திரு. யா. சை. மு. யூசுப் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குமரி மாவட்டம், தோவாளை வட்டத்திற்கு உட்பட்ட ஆரல்வாய்மொழி பகுதியிலுள்ளவர்களது பாசன வசதி மற்றும் குடிநீர் வசதிகளுக்காக பொய்கை ஆற்றின் குறுக்கே அணை ஏதேனும் கட்டும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா ?

(ஆ) ஆம், எனில், அத்திட்டம் எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் 1979–80 ஆம் ஆண்டிற்கான சிறப்பு சிறு பாசனத் திட்டங்களில் ஒன்றாகச் சேர்க்கப்பட்டு அரசின் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1979–80 ஆம் ஆண்டிலே இந்தத் திட்டம் மேற்கொள்ளப்பட இருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே அந்தத் திட்டத்தினால் குமரி மாவட்டம் மட்டுமல்லாமல் அதனையொட்டியிருக்கிற இராதாபுரம் தொகுதியிலே உள்ள வறட்சி மிகுந்த பகுதிகளுக்கும் பாசன வசதியையும், குடிநீர் வசதியையும் ஏற்படுத்திக் கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினாலே ஏறத்தாழ 716 ஏக்கர் 49 செண்ட் நிலத்திற்கு நிரந்தரப் பாசனம் உறுதியளிக்கப்படுகிறது. 582 ஏக்கர் 45 செண்ட் நிலம், பாசனம் இல்லாமல் விடப்பட்ட நிலம் பாசனத்திற்குக் கொண்டுவரப்பட முடிவு

1979 மார்ச் 17]

எடுக்கப்பட்டிருக்கிறது. அதற்காக 22 இலட்சத்து 78 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்பட இருக்கிறது. மேலும், இராதாபுரம் தொகுதியிலே இன்னும் பாசன வசதியை அதிகரிக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. ஜே. ஜேம்ஸ் : துணைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தினால் கன்னியாகுமரி மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும்? நெல்லை மாவட்டத்திலே எத்தனை ஏக்கர் நிலம் பயன்பெறும் என்று அறிவிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட வாரியாக என்னிடத்திலே தற்போது குறிப்பு இல்லை. தனியாகக் கேட்டால் விவரங்கள் சொல்லலாம்.

சடையநேரிக்குளத்தில் ஆக்கிரமிப்பு.

*வினா எண். 453— திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு வேளாண்மை, பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டம், மெஞ்ஞானபுரம் சடையநேரிக் குளம், பலரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்ற, அரசு எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) திருநெல்வேலி மாவட்டம், மெஞ்ஞானபுரம் கிராமத்தில் உள்ள சடையனேரி குளத்தின் 1.34 ஏக்கர் நிலங்களை கிராம மக்களில் ஒருவர் மட்டும்தான் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.

(ஆ) ஆக்கிரமிப்பை அகற்றுவதற்கு வருவாய்த்துறையின் உதவியுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

திரு. இரா. அமிர்தராஜ்: துணைத் தலைவர் அவர்களே, அந்தக் குளத்திலே ஆக்கிரமிப்புச் செய்துள்ளவர் யார்? அப்படி அவர் ஆக்கிரமிப்புச் செய்துள்ளதால் மற்ற விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள், ஆகவே, அந்த ஆக்கிரமிப்பாளரை உடனடியாக வெளியேற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா?